//மிக அவசரம் //

**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் (பொ) செயல்முறைகள்**

**ந.க.எண். 4534/ஆ4/ 2024 நாள். 02.07.2025**

பொருள் : பள்ளிக்கல்வி – தமிழ்நாடு ஊரகப் பகுதி மாணவ/மாணவியர் திறனாய்வுத் தேர்வு டிசம்பர் –2024 (TRUST EXAM) 2024–2025 –ம் கல்வியாண்டிற்கான நிதி ஒதுக்கீடு பெறப்பட்டமை –தமிழ்நாடு ஊரக திறனாய்வுத் தேர்வில் 2021–2022 முதல் 2023–2024 வரை தேர்ச்சி பெற்று தற்போது 10,11,12 வகுப்பில் பயின்று வரும் தகுதியுள்ள மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வங்கி காசோலையாக வழங்கப்பட்டமை – 08.02.2025 அன்று நடைபெற்ற தேர்வில் தேர்ச்சி பெற்ற 9 ஆம் வகுப்பு( 2025–2026 ஆம் கல்வியாண்டில் பத்தாம் வகுப்பு) மாணவ/மாணவிகளுக்கு கல்வி உதவித்தொகை வங்கி காசோலையாக வழங்குதல் – பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவித்தல் –சார்பு

பார்வை : 1.தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.011744 /எம்2/இ1/2023 நாள் .07.03.2025
2.இவ்வலுவலக இதே எண்ணிட்ட செயல்முறைகள் நாள் 21.04.2025
3.தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.011744 /எம்2/இ1/2023 நாள் .22.04.2025

----

பார்வை 1–ல் காணும் பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகளின் படி தமிழ்நாடு ஊரகப் பகுதி மாணவ/மாணவியர்களுக்கான திறனாய்வுத் தேர்வில் 2021–2022 முதல் 2023–2024 வரை தேர்ச்சி பெற்று தொடர்ந்து பள்ளிகளில் பயின்று வரும் 10,11,12 வகுப்பு மாணவர்களுக்கான கல்வி உதவித் தொகை வங்கி காசோலையாக மாணவ /மாணவிகளுக்கு பார்வை 2–ல் 21.04.2025 அன்று இவ்வலுவலகம் மூலம் வழங்கப்பட்டது.

மேலும் பார்வை 3–ல் காணும் செயல்முறைகளின் படி 2024–2025 கல்வியாண்டில் 08.02.2025 அன்று நடைபெற்ற தமிழ்நாடு ஊரகப் பகுதி மாணவ/மாணவியர்களுக்கான திறனாய்வுத் தேர்வில் தேர்ச்சி பெற்ற 104 மாணவ /மாணவிகளுக்கு ( தற்போது 2025–2026 ஆம் கல்வியாண்டில் பத்தாம் வகுப்பு) வங்கி காசோலையினை 04.07.2025 அன்று வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலக நேர்முக நேர்முக உதவியாளரிடம் தனிநபர் மூலம் முகப்புக் கடிதத்துடன் பெற்றுக்கொள்ள சார்ந்த பள்ளித் தலைமை ஆசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் .

மேலும் பெற்றுச் செல்லும் காசோலையினை சார்ந்த மாணவ /மாணவியருக்கு வழங்கி மாணவர்கள் வங்கிகளில் காசாக்கப்பட்டதை உறுதி செய்து விட்டு இத்துடன் இணைக்கபட்டுள்ள பற்றொப்ப இரசீது மூன்று பிரதிகளில் , மாணவ /மாணவியரின் அசல் கையொப்பம் பெற்று மீள இவ்வலுவலகத்தில் 11.07.2025 அன்றைக்குள் வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலக ஆ4 பிரிவில் ஒப்படைக்க சார்ந்த பள்ளி தலைமை ஆசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் .

இணைப்பு :

1. மாதிரி படிவம் பற்றொப்ப இரசீது
2. 104 மாணவ/மாணவிகளின் தெரிவு பட்டியல்

முதன்மைக் கல்வி அலுவலர்(பொ),
வேலூர்.

நகல்

- வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு (இடைநிலை /தனியார் பள்ளிகள் /தொடக்கக்கல்வி ) தகவலின் பொருட்டு அனுப்பிவைக்கப்படுகிறது.